**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 33/2021**

**Date : 02.02.2026**

**வா.சா. 1 – சுப்பையா**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் புன்னைவனம் ஆண்டபெருமாள் குடும்பத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் மூன்று நபர்கள். புன்னைவனம் ஆண்டபெருமாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் பிள்ளைகள் கிடையாது. புன்னைவனம் ஆண்டபெருமாளுக்கு எத்தனை சகோதரர்கள் என்றால் ஒருவர். அ.வ.எண்.44/1121M.E (1946) வழக்கில் யார்யாரெல்லாம் கட்சிகளாக இருந்தார்கள் என்றால் புன்னைவனம் ஆண்டபெருமாளின் சகோதரர் புன்னைவனமான எனது தந்தை வாதியாகவும் முதல் பிரதிவாதி தாணுமாமலைபெருமாள் மற்றும் 2ம் பிரதிவாதி புன்னைவனம் உலகநாத பிள்ளை. மேற்படி வழக்கில் 2ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி புன்னைவனம் உலகநாத பிள்ளையின் வாரிசு நான் என்றால் மகன் வழி பேரன். உலகநாதபிள்ளைக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரு பையன் மற்றும் 2 பெண் பிள்ளைகள். மேற்படி வழக்கில் வாதி உலகநாதபிள்ளை மகன் புன்னைவனத்திற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று பிள்ளைகள்.

மேற்படி வழக்கில் 2ம் பிரதிவாதி புன்னைவனம் உலகநாத பிள்ளையின் வாரிசா என்றால் 2ம் பிரதிவாதியின் பேரன். வாதியின் வாரிசு யார் என்றால் உலகநாதன், சுப்பையா மற்றும் சோமசுந்தரம். 2ம் பிரதிவாதி புன்னைவனம் உலகநாத பிள்ளையின் வாரிசு என்றால்

சரிதான் மேற்படி வழக்கில் வாதியின் மகன் தான் மேற்படி வழக்கில் 2 ம் பிரதிவாதி. மேற்படி வழக்கின் தீர்ப்பு படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். புன்னைவனம் உலகநாதபிள்ளையின் வாரிசுகள் மேற்படி மூன்று பேர் தான் உள்ளோம் என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தாத்தா 2 ம் பிரதிவாதி புன்னைவனம் உலகநாத பிள்ளையின் தாத்தா ஆண்டபெருமாள் என்றால் சரிதான். மேற்படி ஆண்டபெருமாளின் சகோதரன் சுப்பிரமணியனுக்கு எத்தனை குழந்தைகள் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது குறித்து தெரியாது மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மேலும் ஆண்டபெருமாளின் சகோதரன் சுப்பிரமணியனின் எனைய வாரிசுகள் குறித்து விபரங்கள் எனக்கு தெரியாத நிலையில் இவ்வழக்கு தொடர்பாக எவ்வித பகிரங்க அறிவிப்புகளோ நாளிதழ்கள் அறிவிப்புகளோ என்னால் மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரிதான்.

மேற்படி சுப்பிரமணியனின் வாரிசுகள் நாங்கள் மூன்றுபேர் தான் என்று குறிப்பிடுவது தவறு என்றால் சரிதான். ஆண்டபெருமாளுக்கு தபசில் சொத்து உரிமையாக இருந்தது என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. ஆண்டபெருமாள் எவ்வகையில் சுவாதீனம் வைத்திருந்தார் என்பதை பார்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் நித்திய நெய்வைத்திய கட்டளைக்கு பாத்தியப்பட்டது என்று வா.சா.ஆ.1 தீர்ப்புரையில் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல சொத்து அல்ல சொத்தின் வருமானத்தில் இருந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1ல் எங்கே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பக்கம் 4 ல் பாரா 5 ல் " that this property belongs to கட்டளை தர்மம் and not to the

temple deity and that this temple and deity have no possession right over this property" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 ல் ஆங்கில வாசகம் கட்டளை தர்மத்திற்கு உரியது என்று கூறுகிறது என்றால் சரிதான் கட்டளை தர்மம் ஒரு private trust.

வா.சா.ஆ.1 ல் 5 வது பத்தியில் சொல்லப்பட்டவை கட்சியின் தரப்பினரின் வாதம் தான் நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்ல என்றால் சரிதான். வா.சா.ஆ.1 வழக்கில் சுப்பிரமணிய சுவாமி கோவிலோ, திருவிதாங்கூர் கொச்சின் தேவசம்போடோ கட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். 1907 ல் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கட்டளையை எந்தெந்த காலகட்டத்தில் யாரால் நிர்வகிக்கப்பட்டது அல்லது யார்யார் அறங்காவலராக இருந்தார்கள் என்பதை காட்டுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை அது ஒரு குடும்ப டிரெஸ்டு. எனது தாத்தா, அப்பா மற்றும் நான் டிரெஸ்டியாக இருந்ததை காண்பிக்க ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எனது தகப்பனார் எப்போது காலஞ்சென்றார் என்றால் 1984 ல். எனக்கு அதிகாரம் கொடுத்ததாக ஏதேனும் கடிதம் மற்றும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. தீர்மானங்கள் மற்றும் கணக்கு புத்தகங்கள் ஏதேனும் பராமரித்து வருகிறோமா என்றால் இல்லை.

டிரெஸ்டு சம்மந்தமாக ஏதேனும் செலவினங்கள் செய்கிறோமா என்றால் எனது சகோதரரிடம் கேட்க வேண்டும் அவர் தான் பராமரித்து வந்தார். இவ்வழக்கை தாக்கல் செய்ய அதிகார கடிதமோ, தீர்மானமோ என் பெயரில் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். டிரெஸ்டு சம்மந்தமாக ஏதேனும் கூட்டம் மேற்படி ஆண்டபெருமாளுடைய வாரிசுகளான டிரெஸ்டிகள் மூலம் நடைபெற்றதா என்றால் இல்லை. மேற்படி அ.வ.எண்.44/1121M.E (1946) வழக்கு 2 ம் பிரதிவாதியான புன்னைவனம் உலகநாதன் பிள்ளை 1 ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுத்த குத்தகை ஆவணம் செல்லத்தகாது என்று வாதியான உலகநாதபிள்ளை

புன்னைவனம் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்பாணையில் 2ம் பிரதிவாதி பிறப்பித்துக் கொடுத்த ஆவணம் வாதியையோ அல்லது கட்டளை தர்மத்தையோ கட்டுப்படுத்தாது என்று தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆகையால் மேற்படி தீர்ப்பின் படி எனது தகப்பனாரான வாதி தனிநபராகவும் மற்றும் டிரெஸ்டு என்பது தனி அமைப்பாகவும் துலங்கும் என்றால் சரியல்ல.

**வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**